ROLL NO. | | | | |

# INDIAN SCHOOL SALALAH

## FINAL EXAMINATION, FEBRUARY 2026 (AY 2025-26)

**Class: IX (TAMIL SECOND LANGUAGE - 006) Date: 12/02/2026**

**Time: 3 Hrs Maximum Marks: 80**

---

### SECTION - A

### பகுதி - அ (படித்தல் 10 மதிப்பெண்கள்)

**1. பின்வரும் உரைநடைப் பத்தியைப் படித்து அதையடுத்து வரும் பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5 x 1= 5**

கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில், முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில் போன்றவை சோழர் காலச் சிற்பக்கலையின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும் சிங்கமுகக் கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கன.

புதுக்கோட்டை மாவட்டம் , நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி மாவட்டம், சீனிவாசநல்லூரில் உள்ள குரங்கநாதர் கோவில் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. சோழர் கால இறுதியில் திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சோழர்காலச் சிற்பக்கலை நுட்பத்திற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும். சோழர்காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவமைக்கப்பட்டன. கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலைநுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன. சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.

**வினாக்கள்:**

i) தஞ்சைப் பெரிய கோவிலை கட்டிய சோழ அரசர் யார்?

அ. இராசராசன் ஆ இரண்டாம் இராசராசன்.

இ. இராசேந்திர சோழன் ஈ. குலோத்துங்க சோழன்

ii) சோழர் காலம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

அ. சிற்பக்கலை காலம் ஆ. கற்சிலைக்காலம்

இ. குடைவரைக் காலம் ஈ. செப்புத் திருமேனிகளின் பொற்காலம்

iii) நடன முத்திரைகளுடன் கூடிய சிற்பங்கள் எந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன?

அ. மதுரை மாவட்டம் ஆ. கோவை மாவட்டம்

இ. திருச்சி மாவட்டம் ஈ. புதுக்கோட்டை மாவட்டம்

iv) ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகம் எங்கு அமைத்துள்ளது?

அ. தாராசுரம் ஆ. கங்கை கொண்ட சோழபுரம்

இ. ஜெயங்கொண்டம் ஈ. போரூர்

v) சோழர் காலத்தில் எந்த உருவங்கள் மிகுந்த கலைநுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன?

அ. கடவுள் மற்றும் மனிதர்கள் ஆ. இயந்திர மனிதர்கள்

இ. செடிகள் மற்றும் கொடிகள் ஈ. பறவைகள் மற்றும் ஊர்வன

**2. பின்வரும் பத்தியைப் படித்து அதையடுத்து வரும் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5 x 1= 5**

நவம் என்றால் ஒன்பது ஆகும். பாஷாணம் என்றால் விஷம் என்று பொருள். நவபாஷாணம் என்பது ஒன்பது வகையான விஷங்களை முறைப்படி சரியான விகிதத்தில் கலக்கப்பட்ட மருந்தாகும். பாஷாணங்களில் மொத்தம் 64 வகைகள் இருக்கின்றது. இதில் நீலி என்றொரு வகையும் உண்டு. நீலி பாஷாணத்தின் சிறப்பு மற்ற 63 பாஷாணங்களை செயலிழக்க செய்யும் குணமுடையது. ஒன்பது வகையான பாஷாணங்களுக்கும் தனித்தனியாக வேதியல், இயற்பியல் பண்புண்டு. அதை சித்த மருத்துவமுறைப்படி அணுக்களை பிரித்து மீண்டும் சேர்ப்பதை நவபாஷாணம் கட்டுதல் என்பர். தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் நவபாஷாண சிலைகள் உள்ளன. பழனி மலைக்கோவில், கொடைக்கானல் அருகே உள்ள பூம்பாறை, குழந்தை வேலப்பர் கோவில். மற்றொன்று தேவிப்பட்டிணத்தில் அமைந்துள்ளது. இதில் இரண்டு போகர் உருவாக்கியது. தேவிப்பட்டிணத்தில் உள்ளவை யார் உருவாக்கியதென தெரியவில்லை.

**வினாக்கள்:**

1. நவபாஷாணம் என்றால் என்ன?

2. நீலி பாஷாணத்தின் சிறப்பு என்ன?

3. நவபாஷாணம் கட்டுதல் என்றால் என்ன?

4. தமிழ்நாட்டில் நவபாஷாண சிலைகள் எங்கு உள்ளன?

5. நவபாஷாண சிலைகளை உருவாக்கியவர் யார்?

## SECTION - B

## பகுதி – ஆ (இலக்கணம் 12 மதிப்பெண்கள்)

**3. சான்று தருக.** **3 x 1= 3**

i) பெயர்ப் பயனிலை

அ. நீ சென்றாய் ஆ. சொன்னவன் தாமு

இ. அவன் வென்றான் ஈ. அவர்கள் வந்தார்களா?

ii) தோன்றல் விகாரப் புணர்ச்சி

அ. உழவுத் தொழில் ஆ. பொற்குடம்

இ. மலர்மாலை ஈ அறவினை.

iii) தேமாங்காய்

அ. நிரை நிரை நிரை ஆ. நிரை நேர் நேர்

இ. நேர் நேர் நேர் ஈ. நேர் நிரை நேர்

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **3 x 1= 3**

i) வல்லெழுத்துகள் .......................... ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும்.

அ. க, ச, த, ப ஆ. ய, ர, ல, வ

இ. ங, ஞ, ண, ந ஈ. ழ, ள, ற, ன

ii) நிலைமொழியின் இறுதி உயிராகவும், வருமொழியின் முதல் உயிராகவும் இருக்கும்போது, அவற்றை இணைக்க ய், வ் ஆகிய மெய்யெழுத்துகள் தோன்றுவது ..........................................எனப்படும்.

அ. விகாரப்புணர்ச்சி ஆ. இயல்புப் புணர்ச்சி

இ. உடம்படுமெய் ஈ. உவமேயம்

iii). உவமையின் தன்மையைப் பொருள் மீது ஏற்றிக் கூறுவது ........................................ஆகும்.

அ. வேற்றுமை அணி ஆ. உருவக அணி

இ. சொற்பொருள் பின்வரு நிலையணி ஈ. உவமையணி

**5. இலக்கணக்குறிப்புத் தருக. 3 x 1=3**

i) வெள்ளையடித்தான்

அ. பண்பாகுபெயர் ஆ. இடவாகுபெயர்

இ. காலவாகுபெயர் ஈ. சினையாகுபெயர்

ii) தாமரைப் பாதம்

அ. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகுதல்

ஆ. உவமைத் தொகையில் வல்லினம் மிகுதல்

இ. திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகுதல்

ஈ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகுதல்

iii) கு, சு, டு, து, பு, று

அ. முற்றியலுகரம் ஆ. குற்றியலிகரம்

இ. குற்றியலுகரம் ஈ. உருவகம்

**6. கூறியவாறு செய்க. 3 x 1= 3**

i) ஓடும் குதிரை - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாக மாற்றுக.

அ. ஓடிய குதிரை ஆ. ஓடுகுதிரை

இ. ஓவிய குதிரை ஈ. ஓடாக்குதிரை

ii) மொழி பெயர்த்தாள் - பிறவினைத் தொடராக மாற்றுக.

அ. மொழி பெயர் ஆ. மொழி பெயர்க்கப்பட்டது

இ. மொழி பெயர்ப்பித்தாள் ஈ. மொழி பெயர்க்கப்பட்டதா?

iii) "உண்டான்" என்பதில் **பகுதி** எது என்று கண்டறிக.

அ. ஆன் ஆ. உ இ. உண் ஈ. ட்

**SECTION - C**

**பகுதி – இ (இலக்கியம் 31 மதிப்பெண்கள்)**

**7. கீழ்க்காணும் திருக்குறளில் விடுபட்ட சீரினை நிரப்புக. 3 x 1= 3**

i) ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் ........................................

அ. பெறும் ஆ. படும் இ. பட்டு ஈ. பேறு

ii) காமம் ................................மயக்கம் இவைமூன்றன்

நாமம் கெடக்கெடும் நோய்.

அ. பகழி ஆ. அகழி இ. மகுளி ஈ. வெகுளி

iii) குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்

சுற்றமாச் ...................... உலகு.

அ. துறவும் ஆ. சுற்றும் இ. உறவும் ஈ. நிறைவும்

**8. கீழ்க்காணும் பாடலைப் படித்து அதையடுத்து வரும் வினாக்களுக்கு விடையளி. 5 x 1 = 5**

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத

முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்

மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்

கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

**வினாக்கள்:**

i) இப்பாடல் இடம்பெற்ற நூல்?

அ. கலித்தொகை ஆ. நாச்சியார் திருமொழி

இ. புறநானூறு ஈ. அகநானூறு

ii) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ. ஆண்டாள் ஆ. பரணர்

இ. குடபுலவியனார் ஈ. மதுரை கணக்காயனார்

iii) முத்துடைத்தாமம் - இலக்கணக்குறிப்புத் தருக.

அ. இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆ. இரட்டைக்கிளவி

இ. அடுக்குத்தொடர் ஈ. உவமைத்தொகை

iv) ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு .................................................... ஆகும்.

அ. திருப்புகழ் ஆ. திருவாசகம்

இ. நந்திக் கலம்பகம் ஈ. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

v) மது என்ற அசுரனை அழித்தவன் யார்?

அ. திருமால் ஆ. கார்த்திகேயன்

இ. சிவன் ஈ. ஆஞ்சநேயர்

**9. ஏதேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை எழுதுக. 2 x 4 = 8**

i) இராவண காவியத்தில் இடம் பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

ii) குடும்ப விளக்கு நூல் பற்றிய சிறு குறிப்பு வரைக.

iii) தொல்காப்பியம் சிறு குறிப்பு வரைக.

iv) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

**10. ஏதேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடை எழுதுக. 3 x 5 = 15**

i) தமிழின் தனித்தன்மைகளைப் பற்றி எழுதுக.

ii) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலை நயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

iii) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளை குறிப்பிடுக.

iv) நீர்இன்று அமையாது உலகு – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.

v) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

## SECTION - D

## பகுதி - ஈ (துணைப்பாடம் 10 மதிப்பெண்கள்)

**11. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 1 x 10 = 10**

i) வளரும் செல்வம்

ii) விண்ணையும் சாடுவோம்

iii) அகழாய்வுகள்

## பகுதி - உ (படைப்பாற்றல் 17 மதிப்பெண்கள்)

**12. பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1 x 3 = 3**



**13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக. 1 x 8 = 8**

i) உங்கள் பகுதியில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றக் கோரி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ii) உனது தாஜ்மகால் பயண அனுபவத்தை நண்பனுக்குப் பகிர்ந்து கடிதம் எழுதுக.

**(இரு கடிதங்களிலும் உன் முகவரி அருண் / அருணா, 6 மேலமாசி வீதி, மதுரை – 625001 எனக் கொள்க)**

**14. பின்வரும் தலைப்புகளைப் பயன்படுத்தி ஏதேனும் ஒரு கட்டுரை எழுதுக. 1 x 6 = 6**

i) முன்னுரை - தொழில்நுட்ப வளர்ச்சி - தொழில்நுட்ப வளர்ச்சியால் சமூக மாற்றம் - தொழில்நுட்பத்தின் தீமைகள் - எதிர்காலத்தில் தொழில்நுட்பம் - முடிவுரை

**(அல்லது)**

ii) முன்னுரை - கல்வியின் நன்மைகள் - பண்டையகால கல்வி முறைகள் - இன்றைய கல்வி முறைகள் - கல்வியில் உள்ள சிக்கல்கள் - முடிவுரை

**(அல்லது)**

iii). முன்னுரை- விலங்குகள் வாழிடம் - மழையின் ஆதாரம் - காடுகள் அழிப்பு - காடுகளைப் பாதுகாத்தல் - முடிவுரை

*******************************